**சாட்சிகளின் வாக்குமூலம்**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 9/2015**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

வாக்குமூலம் – பி.வா.சா–2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில் குமார் | மதம் | : | |
| த/க/பெ. | : | ரங்கசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | திருப்பூர் | வயது | : | 55 |
| தாலுகா | : | திருப்பூர் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜனவரி மாதம் 29ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

1. நான் 28 ஹவுசிங்யூனிட் மெயின் ரோடு, முத்துசாமிபுரம், திருப்பூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து கடந்த 05.01.2026 தேதி அன்று சாட்சியம் அளிப்பதற்காக அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. அன்றைய தினம் எனக்கு கண் சிகிச்சை எடுத்துக்கொண்டதால் என்னால் வரமுடியவில்லை. என்ன காரணத்திற்காக சாட்சியம் அளிப்பதற்கு இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று எனக்கு அழைப்பாணயில் குறிப்பிடப்படவில்லை இருப்பினும் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டதன் படி இன்று நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

**(சாட்சி வாதியின் மருமகன் என்றும், வழக்கு சம்மந்தமாக அவரிடம் கேள்வி கேட்பதற்காக தான் அழைப்பாணை அனுப்பப்பட்டது என்றும், எனவே சாட்சியை விடையமை வினா (Leading Questions) கேட்கவேண்டும் என்று அனுமதி கேட்கப்பட்டது. வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை எனவே அனுமதி வழங்கப்படுகிறது.)**

2. எனது மனைவியின் தாயார் பெயர் ஜானகி ஆகும். ஜானகி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவரது வருமான விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. ஜானகி அம்மாள் பெயரில் வருமான வரி செலுத்தப்பட்டு வருகிறது. ஜானகி அம்மாள் வருமான வரி நிரந்தர கணக்கு எண் வைத்திருந்தார். அவரது வருமான வரி செலுத்தும் விவரங்களை நான் தான் கவனித்து

வந்தேன். நான் நடத்தி வந்த நிறுவனத்தை 6 வருடங்களுக்கு முன்பு மூடி விட்டதால் தற்போது பார்ப்பதில்லை.

3. அவரது வருமான வரி எவ்வளவு செலுத்தப்பட்டது என்பது எனக்கு தெரியாது. வருமான வரி செலுத்தும் போது ஜானகியின் வங்கி கணக்கில் இருந்து தான் செலுத்தப்படும். ஜானகியின் கரூர் வைசியா வங்கி திருப்பூர் கிளை வங்கி கணக்கில் இருந்து வருமான வரி செலுத்தப்பட்டது. திருப்பூர் பி.என் ரோட்டில் உள்ள இளங்கோ என்ற பட்டய கணக்காளர் மூலமாக வருமான வரி கணக்கு தாக்கல் செய்தோம்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தான் எனது மாமியார் ஜானகி அம்மாள் பெயரில் நிறுவனம் நடத்தி வந்தேன் என்றால் சரிதான். நான் தான் எனது மாமியார் பெயரில் வருமான வரி கணக்கு எண் வாங்கி, வரி செலுத்தி வந்தேன் என்றால் சரிதான். நிறுவனத்தில் வந்த வருமானத்தை நான் தான் பயன்படுத்தி வந்தேன் என்றால் சரிதான். எனது மாமியார் பயன்படுத்த வில்லை என்றாலும் சரிதான். பெயரளவிற்கு தான் ஜானகி அம்மாள் பெயரில் நிறுவனம் இருந்தது என்றும், நிர்வாகம் அனைத்தையும் நான் மட்டுமே கவனித்தேன் என்றால் சரிதான். கரூர் வைசியா வங்கி கணக்கை நான் தான் பராமரித்து கையாள்வேன். நிறுவனம் சம்மந்தமாக மேற்படி வங்கியில் செய்த பரிமாற்றங்கள் பற்றி எனது மாமியாருக்கு தெரியாது. நான் தான் கவனித்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.01.29 18:24:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.